பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 14 புதன்கிழமை 26.02.2025 கதிர் 110

இ னி து ரகசியம் அல்ல!

தமிழ்த்தேசியம்பேசும்அரசியல் கட்சிகள் எப்போதுமே ஒற்றுமை என்று பேசுவது வெறும் தேர்தல் அரசியல் கூட்டுத் தவிர. இன நலன் சார்ந்த அரசியல் ☞ 2

## அடக்குமுறை, அச்சுறுத்தல்களை ஆளும்தரப்பு தீவிரப்படுத்தியுள்ளது

### பொது ஜன பெரமுன எம்.பி. கருத்து

எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறைகளையும், அச்சுறுத்தலையும் ஆளும்தரப்பு தற்போது தீவிரப்படுத்தியுள்ளது. நாமல் ராஜபக்ச ஊருக்கு சென்றால் புதைகுழிக்கு செல்ல நேரிடும் என்று அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் பாரதூரமானது. பத்தரமுல்லை அலுவலகத்தின் திட்டமா இது, தமது இயலாமையை மறைத்துக் கொள்வதற்கு பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளின் பழி ராஜபக்ஷர்கள் மீது சுமத்தப்படுகிறது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

2025ஆம்ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்டத்தில் பலசிறந்த திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ☞ 9

## பாலியாற்றுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுங்கள்

### தமிழ் அரசுக் கட்சி தலைவர் கோரிக்கை

பாலியாறுநீர்வழங்கல்திட்டத்திற்கு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனினும் தற்போது பரீசினைக்குட்படுத்தி இந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கிடு செய்யுமாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது, யாழ்ப் பாண மாவட்ட மக்கள் முகம்கொடுத்துவரும் நீர்விநியோகப் பிரச்சனை தொடர்பாக தாங்கள் ☞ 9



## வறுமையை ஒழிக்க 'பிரஜா சக்தி' திட்டம்

### அறிமுகப்படுத்துகிறது ஆளும்தரப்பு

வறுமையை ஒழிப்பதற்காக பல்வித அணுகுமுறைகளைக் கொண்ட ☞ 9

# உள்ளகப் பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படும்

### அயலுறவுத்துறை அமைச்சர் ஜெனிவாவில் தெரிவிப்பு

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப்பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத் தன்மைவாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதிசெய்யப்படும் என்றுஅயலுறவுத்துறைஅமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வில் நேற்று உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்றுமுடிந்த தேர்தல்களின் ஊடாக அரசியல், பொருளாதார மற்றும்சமூகமறுசீரமைப்பை ☞ 2

## நேராகச் சென்று குழியில் விழும்

### ஆளும்தரப்பு குறித்து ஹக்கீம் ஆரூடம்

ஆளும்தரப்பு நேராகச் சென்று குழியில் விழும் என்றேஎனக்குதெரிகிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு செலவு திட்டத்தை பார்க்கும்போது ☞ 2

## நாமல் ராஜபக்சவுக்கு உயிர் அச்சுறுத்தலாம்

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தேசியமக்கள்சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவர் நாமல் ராஜபக்சவை விரைவில் குழிக்கு அனுப்புவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது ☞ 2

### வடக்கு கிழக்கில் உள்ள 92 ஆயிரம்

## பெண் தலைமை குடும்பங்களின் வருமானத்திற்கு திட்டம் இல்லை

### நாடாளுமன்றில் குகதாசன் எம்.பி. சாடல்

வடக்கு மற்றும் கிழக்கில் 92,000 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ள நிலையில் அவர்களின் நிலையான வருமான வழிமுறைக்கு வரவு செலவுத் திட்டத்தில் விசேடத் திட்டங்கள் முன்வைக் கப்படவில்லை. பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் பெறக்கூடிய சுய தொழில்களை உருவாக்கிக் கொடுக்க புதிய திட்டங்களை ஆளும்தரப்பு அமுல்படுத்தவேண்டும்என்றுதமிழ அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத் திட்டத்தின் 7 ஆம் நாள் விவாதத்தில் ☞ 8

## தேசிய பாதுகாப்புக்கான புதிய சட்டம் விரைவில்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படாததன் காரணமாகவே ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக இந்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் விரைவில் தேசிய ☞ 2

## இரு பொலிஸாரின் பாதுகாப்பு கேட்கிறார் அருச்சுனா எம்.பி.

நீதிமன்றத்தில் சந்தேக நபர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வாரங்களில் பல்வேறு கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை எனது பாதுகாப்பு தொடர்பான கரிசனையை ஏற்படுத்துகின்றது.ஆகவே இரண்டு ☞ 2

### மீனவர் அத்துமீறலைத் தடுக்க

## இந்திய, தமிழ்நாடு அரசுகளின் காத்திரமான நடவடிக்கை தேவை

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழகஆளும்தரப்புகள்உரிய காத்திரமானநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடற்றொழில், நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதாலேயே அவர்கள் கைது செய்யப்படுகின்றனர் எனவும், மீனவர் விவகாரத்தை மனிதாபிமானத்துடனேயே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு அணுகுகின்றது எனவும் அமைச்சர் ☞ 9

## போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும் ஆக்கிரமிப்பு இன்றும் தொடர்கிறது

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல அடிப்படை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். இருப்பினும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான தீர்வுகள் ஏதும் முன்வைக்கப்படவில்லை. எம் மக்களுக்கு ☞ 8

## ஊரின் அதிகாரங்களை தாரைவார்க்கமுடியாது

### "ஊர் எங்களோடு இருக்கட்டும்" என்கிறார் சுமந்திரன்

எங்களுடைய ஊரில் இருக்கும் அதிகாரங்களை நாங்கள் மற்றவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கக்கூடாது. ஆகவே, நாடு அநுரவுடன் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அல்ல என்பதை இந்தப் பத்தியில் நான் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இதனால் தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கின்றேன் என்று என்னைக் கடிந்துகொண்டவர்களும் பலர் உள்ளனர்.

இந்த ஒற்றுமை குறித்த போக்கிலித்தனத்திற்கு இந்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பே ஒரு நல்ல உதாரணம். நாடாளுமன்றத்தில் உள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை புதிய அரசமைப்பை முன்வைத்து ஒன்றித்துச் செயற்படுவதற்கான முயற்சிகளை கஜேந்திரகுமார் எடுத்திருந்தார். இது தொடர்பில் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரையும் சந்தித்துப் பேசியிருந்தார். தொடக்க கட்ட உரையாடல்களை அடுத்து தொடர்ந்து பேசுவதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கை தமிழ் காங்கிரஸைச்சேர்ந்ததன்னையும்ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள ரெலோவைச்சேர்ந்த அடைக்கலநாதனையும் உள்ளடக்கி 10 உறுப்பினர்கள் ஒன்றாகச் செயற்படலாம் என்பதே அவரது திட்டமாக இருந்தது. புதிய அரசமைப்பை நோக்கிய நகர்வு என்று அவர் இதனைக் கூறினாலும், நாடாளுமன்றத்தில் 10 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவாகச் செயற்படும்போது உறுதியான ஒரு வெளிப்படுத்தலைச் செய்யமுடியும் என்பதும் அவரது திட்டமாக இருந்தது.

சிறீதரனும் செல்வமும் அதற்கு முதல் கட்டமாக இணங்கியிருந்தார்கள். அப்படிப் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களாச் செயற்படுவதே பலம் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். ஆனால், நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடந்தபோது மூன்று தரப்புக்களும் மூன்று விதமாகவே வாக்களித்தன. கஜேந்திரகுமார் எதிர்த்து வாக்களித்தார். தமிழ் அரசுக் கட்சியினர் வாக்களிக்காமல் ஒதுங்கினர். செல்வம் ஆதரித்து வாக்களித்தார். இவர்கள் எப்படி ஒற்றுமையாகச் செயற்படுவார்கள் என்பது இந்த லட்சணத்தைப் பார்க்கும்போதே தெரியவில்லையா? வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதா விடுவதா என்பதிலேயே தமக்கிடையில் கருத்தொற்றுமையை அடைய முடியாத இவர்கள்தான் அரசியல் தீர்வு, அரசமைப்பு உருவாக்கம் ஆகியவற்றில் ஒற்றுமைப்பட்டு இனத்திற்காக அரசியல் செய்யப்போகிறார்கள் என்று நம்புவது எவ்வளவு முட்டாள்தனம்.

அவர்கள் தமிழ் இன அரசியலை முன்வைத்ததமதுகட்சிஅரசியலையும்தேர்தல் கூட்டுக்களையும் முன்னெடுப்பார்களே தவிர உண்மையான இன அரசியலை அல்ல. அவர்கள் தேர்தல் கூட்டுக்களை ஏற்படுத்துவது தவறு என்பது எனது கருத்தல்ல. அதனை அவர்கள் மக்களினதும் இனத்திற்குமான தமது அர்ப்பணிப்பு அரசியல் என்று முலாம்பூச முற்படுவதும்தம்மைஓர் இனப்போராளிகளாக முன்னிறுத்த முயற்படுவதும்தான் தவறு.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## உள்ளகப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் நோக்கில் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை வாக்குகள் ஊடாக எம்மைத் தெரிவுசெய்தனர். அதனையடுத்து இலங்கை வரலாற்றிலேயே எம்மால் கட்டமைக்கப்பட்ட நாடாளுமன்றமே மலையகத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்கலாக அதிகளவு பெண் பிரதிநிதிகளையும், மாற்றுத்திறனாளி ஒருவரையும் உள்ளடக்கிய சகல தரப்பினருக்குமானபிரதிநிதித்துவத்துடன்கூடிய நாடாளுமன்றமாகத் திகழ்கிறது. தற்போது நாட்டின் பொருளாதாரம் உறுதியடைந்திக்கிறது. அதனைசகலருக்குமானசமபங்கீட்டை உறுதிப்படுத்தக்கூடிய பொருளாதாரமாக நிலைமாற்றமடையச்செய்வதை நோக்கி நாம் பயணிக்கிறோம்.

அதேபோன்று எமது ஆளும்தரப்புச் சமர்ப்பித்துள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் சமூகப்பாதுகாப்பு செயற்திட்டங்களுக்குஅதிகளவானநிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கியிருக்கிறோம். அதுமாத்திரமன்றிவட,கிழக்குமாகாணங்களில் மீள்குடியேற்றம், வீடமைப்பு மற்றும் நட்டஈடு வழங்கல் ஆகியவற்றுக்கு அவசியமான நிதியொதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை நாம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டத்தின் ஊடாக நேர்மைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறத்தக்கதுமான ஆட்சி நிர்வாக முறைமையொன்றை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு உத்தேசித்துள்ளோம்.

அடுத்ததாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம்ஆகியவற்றைமேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு எமது ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கிறது. அதன் பிரகாரம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடுமற்றும்நல்லிணக்கஅலுவலகம் உள்ளிட்ட உள்ளகப்பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதிசெய்யப்படும்.

அதேபோன்று சகல தரப்பினரதும் நம்பிக்கையைவென்றெடுக்கக்கூடியவகையில் உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழு தொடர்பானகலந்துரையாடல்கள்சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும்.இலங்கையில்இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும். இவ்வாறுநாட்டின்அரசமைப்புக்குஅமைவாக உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும்.

எமது நாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்களிலும், உபகுழுக்களிலும் அங்கம் வகிக்கின்றது. அக்குழுக்களினால் மேற்கொள்ளப்படும் கூட்டங்கள் மற்றும் மீளாய்வுகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிப் பங்கேற்கிறது. நாட்டின் தேசிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் - என்றார்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு தொடர்பான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும். அதற்கான விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

எமது விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நாட்டிலுள்ள சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கே முக்கியத்துவமளிக் கப்படவேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் சந்தேகநபர்கள் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனில் அதனை தவிர்க்க முடியாது.

மாறாக இந்தச் சட்டம் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக புதிய சட்டமொன்று நிறைவேற்றப்பட்ட பின்னரும் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அதன் பிரதிபலன் இவ்வாறிருக்காது. எனவே நடைமுறையிலுள்ள சட்டத்துக்கமையவ நாம் செயற்படுவோம். எவ்வாறிருப்பினும் விரைவில் தேசிய பாதுகாப்பு தொடர்பான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்துக்கு பதிலாக வேறு சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், இன்னும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் விசேட குழுவொன்றை நியமித்து நிகழ்நிலை காப்பு சட்டத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனுடன் தொடர்புடையவர்களது நிலைப்பாடுகளும் கோரப்பட்டுள்ளன. காரணம் இந்த சட்டத்தை இரத்து செய்து அதற்கான இடத்தை வெற்றிடமாக்க முடியாது. இணைய பாவனையாளர்களுக்கான சட்டமொன்று அவசியமாகும். புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரை பழைய சட்டங்கள் நடைமுறையிலிருக்கும் என்றார்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புஉத்தியோஸ்த்தர்களைவழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் நான் எதிர்கொண்ட சம்பவமொன்று எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக காணப்படுகிறது.இம்மாதம் (பெப்ரவரி) 12ஆம் திகதி இரவு யாழ். வலம்புரி ஹோட்டலில் என் மீதும் மற்றும் எனது செயலாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் நான் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளேன் .சந்தேகநபரையும் கைது செய்தனர். எனினும் திடீரென எனக்கு எதிராகவழக்கொன்றுபதிவுசெய்யப்பட்டுள்ளது. இவை நாடாளுமன்ற உறுப்பினராக நான் செயற்படுவதற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை உருவாக்குகின்றது.

கணேமுல்லை சஞ்சீவ நீதிமன்றத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று கடந்த வாரங்களில் பல்வேறு கொலை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவை எனது பாதுகாப்பு தொடர்பான கரிசனையையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையில்எனக்குஏற்பட்டுள்ளஅச்சுறுத்தல் தொடர்பில் சிறப்புரிமையை முன்வைக்க எதிர்பார்க்கின்றேன். ஆகவே எனக்கு இரண்டு பாதுகாப்புஉத்தியோகத்தர்களை ஒதுக்குமாறு கோருகின்றேன். இந்த வேண்டுகோளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்வதுடன், இந்த அவசர நிலைமையை கருத்தில்கொண்டு உங்களின்சாதகமானபதிலையும்உடனடியாக எதிர்பார்க்கின்றேன் என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், சிறப்புரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுமாயின் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்தார்.

## நேராகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடது பக்கம் சிக்னல் விளக்கை எரியவிட்டு வலதுபக்கம்திருப்புவது போன்றே இருக்கிறது. ஆளும்தரப்பு நேராக சென்று குழியில் விழும் என்றே எனக்கு தெரிகிறது.

வரவு செலவு திட்டத்தின் பிரகாரம் 2025இல் ஆளும்தரப்பின் மொத்த தேசிய உற்பத்தி 15.1 வீதமாகக் காணப்படுகிறது. அதேநேரம் மொத்த செலவீனம் 21.8 வீதமாகக் காணப்படுகிறது.

துண்டுவிழும் தொகை 6.7 வீதமாகக் காணப்படுகிறது. இது எமது நிதி உறுதிப்பாடு தொடர்பில் ஒரு கவலையை ஏற்படுத்துகிறது. இலங்கையின் 2025 வருமான இலக்கு அடையக்கூடியது. ஆனால் நீண்டகால சவால் இருப்பதாகசர்வதேசதரப்படுத்தல்நிறுவனமான 'பிச்' நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

அதற்காக நீண்ட மற்றும் நடுத்தரமான சவால்மிக்க திசையை நோக்கியே நாங்கள் பயணிக்க வேண்டி இருக்கும் என்ற எச்சரிக்கையை எதிர்வு கூறி இருக்கிறது. 2025ஆம் ஆண்டுக்கான வருமானத்தை நாங்கள்அடையக்கூடும்ஆனால்துண்டுவிழும் தொகை சவாலுக்குட்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேநேரம் இறக்குமதியை தாராளமயமாக்குவதும் தாக்கத்தை ஏற்படுOதும் எனவும் 'பிச்' தரப்படுத்தல் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அத்துடன் ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு தொடர்பாகவும் 'பிச்' நிறுவனம் குறிப்பிட்டிருக்கிறது. அதாவது, இது நிதி வசதி அளிக்கப்படாத முறையாக இருக்கிறது.

திரட்டுநிதியில் இருந்து ஒதுக்கப்படும்போது இதுவும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதனால் இந்த ஓய்வூதியம் தொடர்பில் மூலாபோய மாற்றம் தேவைப்படுகிறது.

அதேநேரம் தற்போது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதில் கட்டம் கட்டமாக மாற்றம் இடம்பெற வேண்டும். தனியார்துறையினரும்ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு செய்கின்ற வகையில் மாற்றம் இடம்பெறவேண்டும்.

தனியார் ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் ஆளும்தரப்பின பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு பணவீக்கம் குறைவடையும் என 'பிச்' நிறுவனம் தெரிவித்திருக்கிறது. ஆனால் ஆளும்தரப்பு புதிய திசையை நோக்கி பயணிப்பதாக பிரதமர் தெரிவித்திருந்தார். ஆனால் இவ்வாறான திசையை நோக்கியா பயணிக்கிறது என கேட்கிறேன்.

ஆளும்தரப்பு வேண்டுமென்றே ஓய்வூதியத்தை அதிகரித்தல் போன்ற விடயங்களைமேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு இல்லாமல் வெவ்வேறான விடயங்களை கையாள முடியுமா எனப் பார்க்க வேண்டும் என்றார்.

## நாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கருத்து நாமல் ராஜபக்சவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதை காண்பிக்கிறது.

ஆளுந்தரப்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றமை கவலைக்குரியது. நாமல் ராஜபக்சவுக்கு பொதுமக்களின் ஆதரவு அதிகரித்து வருவதால், ஆளும்தரப்பு அவருக்கு தீங்கிளைக்கும் நோக்கில் சதி செய்து வருகிறது.

இதுபோன்றநடவடிக்கைகள்கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே நாமல்ராஜபக்சவின்பாதுகாப்பைஉறுதிப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்எனஅவர்மேலும்தெரிவித்துள்ளார்.

## ஊரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கட்டும்,எம்ஊர்ளங்களுடன்இருக்கட்டும் என்ற சிந்தனையை நாங்கள் மக்களுக்கு முன்வைக்கின்றோம் -என்று இலங்கைத் தமிழ்ரசுக் கட்சின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சியில்நேற்றுசெய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நாங்கள் மக்களுக்கு ஊர் சிந்தனையை முன்வைக்கின்றோம். அது என்னவென்றால், இப்போது மத்திய அரசு தேசிய மக்கள் சக்தியின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தோழர் அநுரவின்கைகளில்நாடுகொடுக்கப்பட்டுள்ளது. அவர்களும்தங்களுடையதேர்தல்சுலோகமாக 'அநுரவோடு நாடு' என்று அறிவித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தல்களிலும்கூட அநுரவுக்காகவே மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். அந்தத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மத்தியில் ஆட்சியில் இருக்கின்றது. அவர்கள் மத்தியில் ஆட்சியில் இருக்கின்றார்கள் என்பதற்காக, எமது ஊர் சம்பந்தப்பட்ட விடயங்களை அவர்களிடம் கொடுக்கமுடியாது. அது எங்களுடைய கையில் இருக்கவேண்டும்.

நாங்கள் ஒருபோதும் நாட்டின் ஆட்சியைப் பிடிக்கவோ அல்லது ஜனாதிபதியாவதற்கோ முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால், எங்களுடைய ஊரில் இருக்கும் அதிகாரங்களை நாங்கள் மற்றவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கக்கூடாது. ஆகவே, நாடு அநுரவுடன் இருக்கட்டும்,எம்ஊர்ளங்களுடன்இருக்கட்டும் என்ற சிந்தனையை நாங்கள் மக்களுக்கு முன்வைக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் ஏற்கனவே எடுத்துக்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக தனித்துப் போட்டியிட்டு, பின்னர் கூட்டாக ஆட்சியமைக்க முடியும். பங்காளிக் கட்சிகளுடன் எமது கட்சியின் தலைவர் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பண்ணைப் பகுதியில் திறந்தவெளி கொண்டாட்டம்

பெப்ரவரி 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பண்ணை நடைபாதை மற்றும் கோட்டையின் பண்ணைபக்கப்பகுதிதிறந்தவெளிக்கொண்டாட்ட நிகழ்வுகளால் நிறைந்திருந்தது.

சிகரம் நிறுவனத்தின் படலை சுற்றுலாசேவைப் பிரிவு, ஆயுசு 100 பிரிபூரண நலவாழ்வு மையம் என்பன இணைந்து, ஈஎஸ்.ஏ.எவ். குளோபல், கனடா நிறுவனத்தினருடன் கூட்டாக முன்னெடுத்த இந்த நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இப்பகுதியில் ஒரு மாலைநேர மகிழ்வூட்டல் பொழுதாக அமைந்திருந்தது.

மாலை 4 மணியளவில் கிறிஸ்துவுக்கான இளைஞர் அணியின் தொண்டர்களின் ஏற்பாட்டில் ஆரம்பமான விளையாட்டு நிகழ்வுகளில், சிறுவர்கள், இளைஞர், யுவதியர், பெரியவர்கள், ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி உற்சாகமாக கலந்துகொண்டு மகிழ்வடைந்தனர்.

சாக்கோட்டம், பலகை நடை, கயிறிழுத்தல், ஓலை பின்னுதல், சங்கீதக் கதிரை என ஏராளமான விளையாட்டு நிகழ்வுகள் இதில் கலந்துகொண்ட அனைவரையும் மிகுந்த உற்சாகமான நிலைக்கு இட்டுச்சென்றன.

விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி உற்சாகமளிக்கப்பட்டது.

சிகரம் நிறுவனத்தின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோடீஸ்வரன் றுஷாங்கன் மற்றும் ஈஎஸ்.ஏ.எவ். குளோபல் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் செரூபா ஆகியோர் தமது இந்த முயற்சியின் நோக்கம், இலக்குகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாக பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

தொடர்ந்து, சிகரம் நிறுவனத்தின் ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையத்தின் யோகாசன வழிகாட்டல் நிகழ்வு நடைபெற்றது.

யோகக் கலையில் இந்திய அதியுயர் பட்டம் பெற்ற யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த யோகாசன வழிகாட்டல் நிகழ்வை,

சிறுவர் யோகக்கலை நிபுணர் சித்த மருத்துவர் இரத்னலகி, ஆயுசு 100 யோகாசன ஆசான் சித்த மருத்துவர் இராகுலன், சக பயிற்றுநர் சித்த மருத்துவர் தர்சினி, வைகறை யோகாசன பயிற்சி மையத்தின் பயிற்றுநர் சித்த மருத்துவர் தனுராஜ் மற்றும் சக பயிற்றுநர் சித்த மருத்துவர் ஜனனி ஆகியோர் யோகாசனத்தின் பயன்கள், நன்மைகள், நோயற்ற வாழ்வுக்கான அதன் வழிமுறைகள் பற்றிய விளக்கங்களை பங்குபற்றியோருக்கு வழங்கினர்.

மருத்துவர் இரத்னலகியின் ஆயுசு சிறுவர் யோகா பயிற்சி நிலையத்தின் மாணவர்களான சிறுவர்களுடன் இணைந்து, ஆயுசு 100 யோகா ஆசான் மருத்துவர் இராகுலன், பயிலுநர்கள் மற்றும் வைகறை யோகாசன பயிற்சிமையத்தின் மருத்துவர் தனுராஜ் ஆகியோரும் இணைந்துயோகாசனசெயன்முறை விளக்கங்களை வழங்கினர்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பொப் இசைப் பாடகர் ஹென்ஸ்மன் அழகிய தமிழ் பொப் இசைப் பாடல்களை பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தார்.





உள்ளூர் உற்பத்தி நிறுவன உரிமையாளரான ஜீவாகரன் இணை முயற்சியாளரான அவரது மனைவி, பிள்ளைகள் இணைந்து, பாரம்பரிய ஆரோக்கிய உணவு வகைகளான குரக்கன் கூழ், புட்டும் நண்டுக்கறியும், தோசை ஆகியவற்றை தயாரித்து வழங்கி, நிகழ்வில் கலந்துகொண்டோரின் நாவுக்கும் சுவையூட்டி மகிழ்வித்தனர்.

உள்ளூர் மக்கள் மாத்திரமன்றி, யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்திருந்த தென்னிலங்கையைச்சேர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த நிகழ்வைக் கண்டுகளித்து, உணவு வகைகளையும் சுவைத்தனர்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் அவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கௌரவித்ததுடன், நிகழ்வின் முக்கியத்துவம், அதன் எதிர்கால வளர்ச்சிக்கான தமது பூரண ஒத்துழைப்பை நல்குவதாகவும் உறுதியளித்துச்சென்றிருந்தார்.

## மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களின் நினைவு

(சியாஜ்)

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் புத்தளம் மாவட்ட கிளையின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அவர்களின் நினைவு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் தமீம் (ரஹ்மானீ) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இயத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் அவர்கள் கலந்து கொண்டு விஷேட உரையினை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், ஜம்இயத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், மத்ரஸா பரிபாலன சபையினர், உலமாக்கள், புத்தி ஜீவிகள் மற்றும் அப்துல்லாஹ் ஹஸரத்தின் குடும்ப உறுப்பினர்களும், காஸிமிய்யா மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் அவர்களுக்கு மத்ரஸா பரிபாலன சபை சார்பாக அல் ஹாஜ் எஸ்.ஆர்.எம்.முஸம்மில், கவிஞர் புத்தளம் மரிக்கார், புத்தளம் மாவட்ட ஜம்இயத்துல் உலமா தலைவர் மற்றும் உறுப்பினர்கள், புத்தளம் நகர ஜம்இயத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.பீ.ஜிப்னாஸ் (அல் மிஸ்பாஹி) உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள்,

ஜம்இயத்துல் உலமா புத்தளம் அக்கறைப்பற்று கிளை தலைவர் அஷ்ஷெய்க் எம். எம்.எம். மிஹ்லார் (நளீமி) மற்றும் அப்துல்லாஹ் ஹஸரத்தின் குடும்ப உறுப்பினர்களால் நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.





## தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் புலமையாளர் கௌரவிப்பு நிகழ்வு

### கற்பிட்டியில் சம்பவம்

(சியாஜ்)

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் கற்பிட்டி நகரில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலைகளில் இம்முறை நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் தலைமையகத்தில் தலைவர் மற்றும் உப தலைவர்களான எஸ் எம் அருஸ், எம் எம் எம் நவ்ப் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.



கற்பிட்டி நகரில் உள்ள தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் மாணவி அன்பஸ் ஆசீகா (148), அல்ஹிரா ஆரம்ப பாடசாலையின் மாணவர்களான மொஹமட் மில்ஹான் மொஹமட் மிஹ்ரான் (157), மொஹமட் நசீர் மொஹமட் நப்லான் (138), அல் அக்ஸா தேசிய பாடசாலை மாணவர்களான லாபிர் அலி பாத்திமா பஹ்மா (138), மொஹமட் சப்பி அயான் அஹமட் (140), மற்றும் சிங்கள மொழி பாடசாலையின் மாணவர்களான டப்லியூ.டி ஒசேன் தெவ்மின் திஷேரா (154), டப்லியூ. டீ. ஹஸ்மின சேவியர் பெர்ண்டோ (166) ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்விற்கான பூரண அனுசரணையை கற்பிட்டி மஹ்திபவுண்டேஷனின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பழைய பல்லவிதான் மாற்றம் இல்லை

ஆட்சியில் உள்ள ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தி தாம் எல்லாவற்றையும் மாற்றுவோம் என்றது. இலங்கை மக்களின் கிளர்ச்சியின் விளைவாக மேலெழுந்த 'முறைமை மாற்றம்' எனும் பெருங்குரலை நிறைவேற்றுவோம் என்றது. இருப்பினும் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அது ரணில் – ராஜபக்ச ஆட்சியின் அடிச்சுவட்டிலேயே பயணிக்கின்றது என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

பன்னாட்டு நாணய நிதியத்தின் உடன்படிக்கை முதல் வரிக் கொள்கைகள் ஈறாக இந்த ஆளும்தரப்புக்கு எனறு ஒரு கொள்கை இல்லை, ரணில் – ராஜபக்சவின் தொடர்ச்சியே இது என்கிற குற்றச்சாட்டுக்கு, தம்மால் எதையும் செய்ய முடியாத நிலையில் சிக்கவைப்பட்டி–க்கின்றனர் என்பதே ஆளும்தரப்பினரின பதிலாக இருக்கின்றது. ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் தமிழர்களுக்கு நீதியை வழங்கும் விடயத்திலும் ஆளும்தரப்புக்கு ரணில் –ராஜபக்சக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றவேண்டிய வெளி நிர்ப்பந்தங்கள் எதுவும் இல்லை. அவர்கள் துணிச்சலாகவும் சுதந்திரமாகவும் முடிவுகளைத் தாராளமாக எடுக்கமுடியும். ஆனால், அவர்கள் அதனைச் செய்ய முன்வரவில்லை. ரணில் – ராஜபக்சக்களின் அதே ஏமாற்றும் அரசியலையே முன்னெடுக்க முற்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப்பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதிசெய்யப்படும் என்று தெரிவித்திருப்பது இதனையெ உறுதிப்படுத்துகின்றது.

"தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு எமது ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கிறது. அதன் பிரகாரம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப்பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மை வாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதிசெய்யப்படும். அதேபோன்று சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும். இலங்கையில் இடம்பெற்றவன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும். இவ்வாறு நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும்" என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பொறிமுறைகள் எல்லாவற்றையும் தமிழர்கள் கடந்த காலங்களில் அடியோடு நிராகரித்துவிட்டார்கள். காணாமற்போனோருக்கான அலுவலகங்களை ஏற்கப்போவதில்லை, இழப்பீடுகளைப் பெறப்போவதில்லை என்று தெரிவித்தே 3 ஆயிரம் நாட்களாக காணாமற்போனோரின் உறவினர்கள் வீதியில் கிடந்து போராட்டம் நடத்தி வருகின்றார்கள். தமது முடிவைப் பல தடவைகளில் அரசுத் தலைவர்களுக்கும் ஆளும்தரப்புக்களுக்கும் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துமிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதையே மீண்டும் நடைமுறைப்படுத்தப் போவதாக இந்த ஆளும் தரப்பும் கூறுகின்றது.

அதுபோன்றே, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விவகாரமும். இந்தக் குழுவையும் தமிழர்கள், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் நிராகரித்துவிட்டார்கள். இப்படிப்பட்ட அரசுத் தலைவர் ஆணைக்குழுக்களால் பயனேதும் இல்லை என்றும் இத்தகைய குழுக்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தும் விட்டார்கள். ஆனாலும் அதையேதான் செய்வேன் என்று தற்போதைய ஆளும்தரப்பும் அடம்பிடிக்கின்றது.

மொத்தத்தில், வெளிநிர்ப்பந்தங்கள் இல்லாதபோதும் தமிழர்கள் விடயத்திலும் இந்த ஆளும்தரப்பு ரணில் – ராஜபக்சக்களின் தடத்தையே பின்பற்ற முயற்சிக்கின்றது. இது இந்த ஆளும்தரப்பிடம் எதிர்பார்க்கப்பட்ட முறைமை மாற்றம் அல்ல. ஏமாற்றம் மட்டுமே.

# நல்லதண்ணி ஹமில்டன் பகுதியில் வனத்தில் தீ விபத்தில் 30 ஏக்கர் நாசம்

(கிஷாந்தன்)

நல்லதண்ணி ஹமில்டன் வனப்பகுதியில் ஏற்பட்ட தீ தற்போது முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வனப்பகுதியில் ஏற்பட்ட தீயால் கிட்டத்தட்ட 30 ஏக்கர் நிலம் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் ஹற்றன் வனப்பகுதி காப்பாளர் வி.ஜே.ருக்ஷன் தெரிவித்தார்.



நல்லதண்ணி ஹமில்டன் பகுதியில் 23 ஆம் திகதி மதியம் ஏற்பட்ட தீ, அப்பகுதியில் நிலவிய மிகவும் வெயில் வானிலை காரணமாக, வனப்பகுதி முழுவதும் வேகமாகப் பரவியது. லக்ஷபான



இராணுவத்தினர், வன பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் மற்றும் நல்லதண்ணி பொலிஸ் அதிகாரிகள் பரவி வந்த தீயைக் கட்டுப்படுத்த முயன்ற போதிலும், மலையின் உச்சியில் பரவிய தீயைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருந்துள்ளது. இருப்பினும், நோர்வூட் பிரதேச செயலாளர் சமிரா கம்லத்தின் தலையீட்டால், இலங்கை விமானப்படை பெல் 412 ஹெலிகொப்டரின் உதவியுடன் மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு, 11 முறை தண்ணீர் தெளித்த பின்னர் தீ கட்டுப்படுத்தப்பட்டது மேற்படி வனப்பகுதி காப்பாளர் வி.ஜே. ருக்ஷன் மேலும் தெரிவித்தார்.



மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் நிலவும் கடுமையான வெயில் வானிலை காரணமாக, வனப்பகுதிகளுக்கு தீ வைக்கும் நபர்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால், தனது அலுவலகத்திற்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ பொதுமக்களைத் தெரிவிக்குமாறு வி.ஜே. ருக்ஷன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணி புத்தளத்தில் சம்பியனானது

(சியாஜ்)

புத்தளம் லெஜென்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட, அணிக்கு தலா 09 பேர்களை கொண்ட உதைபந்தாட்ட போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தளம் ஸாஹிரா கல்லூரியின் விளையாட்டரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

08 அணிகள் கலந்து கொண்ட இந்த தொடரில் ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட், த்ரீ ஸ்டார்ஸ், மெட்ரிட் மற்றும் கல்பிட்டி பேர்ள்ஸ் ஆகிய 04 அணிகள் அரை இறுதி போட்டிகளுக்கு தெரிவாகின.

அரை இறுதி போட்டிகளில் ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட் மற்றும் கல்பிட்டி பேர்ள்ஸ் ஆகிய அணிகள் இறுதி போட்டிக்கு முன்னேறின.

பரபரப்பான இறுதிப்போட்டியில் ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணி 02 : 01 கோல்களால் வெற்றி வாகை சூடியது.

தொடரின் சிறந்த வீரராக பேர்ள்ஸ் அணியின் ரிழ்வான் தெரிவானார். தொடரின் சிறந்த கோல் காப்பாளராக ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணியின் லுக்மான் தெரிவானார்.

புத்தளம் உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் மற்றும் உதைப்பந்தாட்ட நடுவர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம்.பஸ்ரின் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

இதே வேளை புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகரும், தலைவருமான முஹம்மது யமீன் இத்தொடரில் நடுவர்களாக கடமையாற்றியவர்களுக்கு மேலங்கிகளையும் வழங்கி வைத்தார்.



# ‘சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம்’ தொடர்பான கலந்துரையாடல்

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, மற்றும் சமூக சமூக வலுவூட்டல் அமைச்சின் சமுர்த்தி திணைக்களத்தின் சமூக வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டுக்கான தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) மாவட்ட செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

சமூகவலுவூட்டல் ஊடாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நலன்புரித் திட்டங்களைப் சிறந்த முறையில் மேற்கொண்டு வறுமையை ஒழித்தல் வலுவூட்டலின் முக்கிய துறைகள் மற்றும் அஸ்வெசும, மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தெரிவுகளும் சிறந்த முறையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் என்று இந்தக் கலந்துரையாடலில் தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,

மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். 113

# அட்டாளைச்சேனை பிரதேச இலக்கிய விழா

(றமீஸ்)

கலாசார அலுவலர்கள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துபிரதேசஇலக்கியவிழாஅட்டாளைச் சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உதவிபிரதேசசெயலாளர்சட்டத்தரணி நஹீஜா முஸப்பிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது கலைஞர்கள், எழுத்தாளர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.றஜாயாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றஇந்நிகழ்வின்போதுகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எஸ்.ஜஃபர், எம்.அஷ்ரஃப் ஆகியோர் துறைசார் அதிதிகளாய் கலந்து கொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேசமட்டத்தில்நடத்தப்பட்ட இலக்கிய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் போன்றோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போதுகலாசாரபண்பாட்டுகலை நிகழ்சிகள் மேடையேற்றப்பட்டதுடன், அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பவாஸ் சலாஹுதீன் எழுதிய ‘மரக்கல கோலம்’ நூல் வெளியீடு

(சியாஜ்)

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் தொடர்பாக கல்வியியல், சமூகவியல் பாடங்களின் விரிவுரையாளர் பவாஸ் சலாஹுதீன் எழுதிய மரக்கல கோலம் என்ற முகமூடிகளின் பின்னணியில் இலங்கை முஸ்லிம்கள் நூல் புதன்கிழமை கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 04 மணிக்கு வெளிடப்பட உள்ளது.




இலங்கை முஸ்லிம்களின் வரலாறு குறித்து மும்மொழியில் வெளிவரும் ஒரு நூலாக இந்நூல் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கயஸ் – மோட்டார் சைக்கிள் தர்மபுரம் பகுதியில் விபத்து

தர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பகுதியில் புது குடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த கயஸ் வாகனமும் பரந்தன் பகுதியில் இருந்து விசுவமடு பகுதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குமாற்றப்பட்ட நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.





கயஸ் வாகனில் வாகனத்தில் பயணித்த ஒருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுவருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 316



காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வெளிக்களத் தலைமைத்துவப் பயிற்சிகள்

## கற்பிட்டியில் நடைபெற்றன

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் வதிவிட வெளிக்கள தலைமைத்துவ பயிற்சி வாரியாபொலயில் உள்ள வடமேல் மாகாணபயிற்சிநிலையத்தில்வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் கற்பிட்டி பிரதேசத்திற்கான பொறுப்பாளர் சுப்புன்தலைமையில்இடம்பெற்றது.

வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் முழுமையான அனுசரணையுடன் இடம்பெற்ற இந்தத் தலைமைத்துவ வெளிக்கள பயிற்சியின் போது வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் கடந்த கால செயற்திட்டங்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான செயற்திட்டம் பற்றியும் தெளிவூட்டப்பட்டது.





இதில் கற்பிட்டி பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பல்வேறு பிரிவினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இல்லத் திறனாய்வுப் போட்டி

(றிபாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி லீடர் அஸ்ரப் மைதானத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எல். பதியூத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

எம்.எச்.எம்.ஜாபீர் பிரதம அதிதியாகவும், கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான சீ.எம்.முபீத், எம்.எல்.சாலித்தீன், மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பணிப்பாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளருமான சட்டத்தரணி சீ. எம். ஹலீம் விசேட அத்தியாகவும் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் பதக்கம், சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.








# அர்ச்சுனா எம்.பியின் இனவாதக் கருத்துகளை நாடாளுமன்ற உரை குறிப்பிலிருந்து அகற்றுக

## அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா கண்டனம்

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம்கள் ஓர் இனம் இல்லை, அவர்களும் தமிழர்கள் தான் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய இனவாதப் பேச்சை வன்மையாக கண்டிக்கிறோம்.



சிங்களவர், தமிழர் எனும் இரண்டு இனங்களே இலங்கையில் உள்ளன. முஸ்லிம்கள் தமிழர்களுக்கு தான் உள்ளனர் என்று நாடாளுமன்றில் அவர் இனவாதம் பேசினார்.

அர்ச்சுனா இராமநாதன் எம்.பியின் இந்த கருத்து தொடர்பில் எந்தவொரு முஸ்லிம் எம்.பியும் கண்டனம் வெளியிடவில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது என அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா கண்டனம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

விடுதலை புலிகள் ஆயுதமுனையில் கடந்த காலங்களில் செய்தவற்றை நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டு செய்யலாம் என விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதரவாளராக தன்னை அடையாளப்படுத்தி கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முனைவது பல்லினம் வாழும் சோஷலிச ஜனநாயக குடியரசு நாடான இலங்கையில் எப்போதும் நடக்காது என்பதை அவர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தான் நாடாளுமன்றம் சென்ற முதல் நாளிலிருந்து முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர அர்ச்சுனா இராமநாதன் பற்றி கூறியதை மெய்ப்பிக்கும் விதமாக நடந்து வருவதை நாட்டுமக்கள் அறியாமலில்லை.

தனக்குவாக்களித்த மக்களுக்கு நல்லது செய்வதாககூறிக்கொண்டு நாட்டின்இறையாண்மையையும், அரசமைப்பையும் மீறும் விதமாக நடப்பது அர்ச்சுனா இராமநாதன் போன்றவர்களுக்கு பொருத்தமில்லை. இந்த உரைக்காக அவர் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிங்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோரி இந்த கருத்தை வாபஸ் பெற வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் தலைவர்களும், எம்.பிக்களும் மௌனத்தை கலைத்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய இனவாதப் பேச்சை கண்டிக்க வேண்டும் என்பதுடன் அவரது உரையின் இனவாத கருத்தை நாடாளுமன்ற உரை குறிப்பிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.






# பொலீஸ் பரிசோதனை நிகழ்வு தருமபுரத்தில்





கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் பொலீஸ் நிலையத்தின் வருடாந்த பொலீஸ் பரிசோதனைநிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) தருமபுரம் மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட்வாத்திய அணிவகுப்புமரியாதையுடன் கிளிநொச்சி மாவட்ட பொலீஸ் அதிகாரி சிசிர பெத்த தந்ரியால் நடத்தப்பட்டது.

தர்மபுர பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள அணி வகுப்பு மரியாதை பொலீஸ் நிலைய வாகனங்கள் மற்றும் பொலீஸாரின் சீருடைகள் அவர்களின் இருக்கை அறைகள் என்பனவற்றை பொலீஸ் பரிசோதனை மூலம் பார்வையிடப்பட்டது. 316

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட மு.கா. தயாராகியது

(ஹமீட்)

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீல.மு.கா. கட்சி போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை மாலை அட்டாளைச்சேனையில் தனியார் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.



உதுமாலெப்பை எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக எதிர்க்கட்சி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்து வருகின்றோம்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீல.மு.கா. கட்சி சில மாவட்டங்களில் மரச்சின்னத்திலும் சில மாவட்டங்களில் கூட்டுச்சேர்ந்தும் போட்டியிடவுள்ளது. ஆனால் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிடவுள்ளது .

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட தயாராகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவதன் மூலம்தான் எமது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். இக் காலகட்டம் முஸ்லிம்களுக்கு முக்கியமானதாகும். பிரிந்து நிற்கின்ற முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

நாட்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர் பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விடம் ஸ்ரீல.மு.கா. கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

நாம் புதிய யுகத்துக்கான அரசியலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முஸ்லிம்களின் அரசியல் உரிமைக்காக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி ஏனைய சமூகத்தினருக்காகவும் குரல் கொடுத்து வருகின்றது. - என்றார்.



# சிவராத்திரி விரத மகிமை சிறப்புச் சொற்பொழிவு

மானிப்பாய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான சிவராத்திரி தினஉற்சவ நிகழ்வில் கடந்த புதன்கிழமை இரவு 8 மணிக்கு 'சிவராத்திரி விரத மகிமை' என்னும் விடயப்பொருளில் செஞ்சொல்வேந்தர் , சைவப்புலவர் செ.த.குமரன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

# சமுர்த்தி சமூக வலுவூட்டல் திட்டம் குறித்த விசேட தெளிவூட்டும் நிகழ்வு

(ஹஸ்பர்)



மாவட்ட மட்டத்தில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு சமுர்த்தி சமூக வலுவூட்டல் திட்டம் தொடர்பான விசேட தெளிவூட்டும் நிகழ்வு திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



தங்கி வாழும் மனநிலையிலிருந்து விலகி சுதந்திரமான பிரஜைகள் சமூகம் ஒன்றைக்கட்டியெழுப்பும் பொருட்டு மக்களை வலுவூட்டுவது அத்தியாவசியமானதாகும்.

மக்களிடத்தேயிருந்து கட்டியெழுப்பப்படுகின்ற பலத்தை அடிப்படையாகக் கொண்டு ஐவகை வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்து பிரஜையையும் தேசிய பொருளாதாரத்தின் பேரபிமானமுள்ள பங்காளர் ஒருவராக உருவாக்குவதே இவ்வேலைத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இதன்போது வளவாளர்களாக தமிழ் மொழியில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி ஏ. பாக்கியராஜா மற்றும் சிங்கள மொழியில் சமூக பாதுகாப்பு மற்றும் நலம்புரி பணிப்பாளர் எச்.கேரணவீர ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

கடந்த காலத்தில் செயற்படுத்தப்பட்ட முக்கிய நலத்திட்டங்கள், வாழ்வாதார மேம்பாடு, நிதி உள்ளடக்கம், உள சமூக ரீதியான உயிர்ப்பூட்டல்கள், சமூக பாதுகாப்பு, பயிற்சியும் வழிகாட்டல்களும், பயனாளிகளைத் தெரிவு செய்தல், இலக்குகள், ஒழுங்குமுறை, தரவு சேகரிக்கும் முறை, பங்குதாரர்கள், கண்காணிப்பு, படிநிலைகள், முன்னேற்ற மேலாய்வு போன்ற பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்கள், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# முனீரா பெண்கள் உயர்தர பாடசாலையின் 'மின்னும் தாரகைகள்' கௌரவிப்பு நிகழ்வு

## அட்டாளைச்சேனையில் நிகழ்வு

(சியாத்)

அட்டாளைச்சேனை முனிரா பெண்கள் உயர்தர பாடசாலையின் 'மின்னும் தாரகைகள்' கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். சியாத் தலைமையில் பாடசாலை கூட்ட மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



இந்த நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றகுமதுல்லாஹ், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளரும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளருமான ஏம்.ஏ.எம்.றியாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எம்.ஏ. சித்தி பாத்திமா, பி.ஜிஹானா, அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எச்.எம் றஸ்மி, பிரதி அதிபர் ஏ.கே.அனிஸ், பாலமுனை இப்னு சீனா கனிஷ்ட வித்யாலயத்தின் அதிபர் எம்.ஏ. சுஹைறா மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது கடந்த 2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சித்திபெற்ற 54 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடற்ற தீர்வு கிடைக்கும் வரையில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதை தவிர வேறு எந்த தெரிவுகளும் தமக்கு கிடையாது. போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புக்கள் இன்றும் தொடர்கின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்தின்பின்னரான76வருடங்களாக இந்த நாட்டை இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் மாத்திரமே ஆட்சி செய்தன. பெயர்கள் மாறுபட்டாலும் அந்த இரண்டு கட்சிகளே ஆட்சி செய்துவந்துள்ளன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் கடந்த 76 வருடங்களை காட்டிலும் மாறுபட்ட காலகட்டமாக தற்போதைய நிலை இருக்கின்றது.

இனப்பிரச்சினைகள் மற்றும் தமிழ்த் தேசிய வாதம் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கேட்காவிட்டாலும் அவர்களின் கொள்கையை முன்னெடுப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் தாம் ஆட்சிக்கு வந்தால் இனவாதத்தை முற்றாக இல்லாமல் செய்வதாக கூறினர். இனப்பிரச்சினைக்கான அடிப்படைகாரணம்இனவாதமாகும்.இதனை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

காலம்காலமாக இனவாதத்தால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தை அரசாங்கம் முன்வைக்கும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஏதும் குறிப்பிடப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டவாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். இந்த மாகாணங்களுக்காக விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வடக்கில் வீதி அபிவிருத்திருக்காக 5000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்கள் உள்ளன. அதன்படிஒருமாவட்டத்திற்குஆயிரம் மில்லியன் ரூபாவே கிடைக்கும். அடிப்படை உட்கட்டமைப்புக்கு குறைந்தபட்சம் 1300 மில்லியன் ரூபாவாவது தேவையாகும். அதேபோன்று யாழ். நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது போதுமானதல்ல. அத்துடன் கச்சேரிக்கான மூலதன செலவை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாணத்திற்கு 187 மில்லியன் ரூபாவும், மன்னாருக்கு 189 மில்லியனும், வவுனியாவுக்கு 100 மில்லியனும், முல்லைத்தீவுக்கு 126 மில்லியனும், கிளிநொச்சிக்கு 179 மில்லியனும் ஒதுக்கப்படுகின்றது. எனினும் அம்பாந்தோட்டைக்கு 500 மில்லியனுக்கும்அதிகமாகவும், மாத்தறைக்கு 400 மில்லியனுக்கும் அதிகமாகவும், கம்பஹாவுக்கு 500 மில்லியனுக்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன. கேகாலை, இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் அவ்வாறே அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் எமது மாவட்டங்களுக்கு 200 மில்லியனுக்கும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இவை. இங்கே என்ன செய்தியை கூற விரும்புகின்றீர்கள். இந்த மாவட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கூறினாலும் அதற்கு மாற்றமான வகையிலேயேநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கீழுள்ள கல்வி அமைச்சின் முன்பள்ளிஆசிரியர்களுக்குமாதாந்தம்6000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழுள்ள முன்பள்ளிஆசிரியர்களுக்கு20ஆயிரத்திற்கும் மேல் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஏன் இவ்வாறு வேறுபட்ட வகையில் கொடுப்பனவு, இது கல்வியை இராணுவ மயமாக்கும் விடயம்தானே. கடந்த ஆளும்தரப்பின் இந்தக் கொள்கையை நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். போர் முடிவடைந்து15 வருடங்கள் நிறைவடைந்தும் தற்போதும்அடக்குமுறையானசெயற்பாடுகளே இருக்கின்றன.

கிழக்குமாகாணத்தைஎடுத்துக்கொண்டால் நிதி கேந்திரமாக மாற்றப்படும் என்று கூறப்பட்டு, அந்த பொறுப்பை இந்தியா ஏற்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் சர்வதேச ரீதியில் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியா இதை ஏற்றுக்கொள்ளுமா? இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா அவற்றை பெற்றுக்கொள்ள விரும்புகின்றது. ஆனால் நீங்கள் வேறு நிறுவனங்களுக்கு கொடுக்க முயற்சிக்கின்றீர்கள். இந்நிலையில் இந்தியா கிழக்கில் அபிவிருத்திகளை செய்யுமா? நீங்கள் இதில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

விவசாயத்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு துறைகளை எடுத்துக்கொண்டால் வடக்கு மற்றும் கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம், உயர்பாதுகாப்புவலயங்களாக பெரும்பாலானகாணிகளைகைப்பற்றியுள்ளன. பொதுமக்கள் தமது விவசாய நிலங்களுக்கு செல்வதற்காக நீதிமன்றத்தை நாட வேண்டியுள்ளது.

அந்த மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடுபோன்றஇடங்களில்தமிழர்களின் பால் பண்ணை தொழிலுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மயிலத்தமடு மேய்ச்சல் தரை பகுதிக்காக மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின்வாழ்வாதாரம்பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புத் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் முன்னைய அரசாங்கங்களின் வரவு செலவுத் திட்டத்தை போன்றதாகிவிடும். இந்த ஆளும்தரப்பின் கொள்கை முன்னைய ஆளும்தரப்பின் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் இருந்து மாறுபடாது. நாங்கள் கடந்த ஆளும்தரப்புகளின் வரவு செலவுத்திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தோம்.

இவ்வாறான அடிப்படை பிரச்சினைகள் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர். இந்த ஆளும்தரப்பின் ஊடாகப் பெரும் மாற்றம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எம் மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால்இந்தவரவுசெலவுத்திட்டத்தில்வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தீர்வுகள் ஏதும்குறிப்பிடப்படவில்லை. ஆளும்தரப்பானது எங்களுக்குகுழப்பமில்லாததீர்வைவழங்கும் வரையில் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதை தவிர எங்களுக்கு வேறு தெரிவுகள் கிடையாது என்றார்.

## பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் விரிவாக்கமானது, ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நம்பிக்கைக்குரிய ஒருபடியாகும். பொருளாதார மாற்றச் சட்டத் திருத்தம், அரச-தனியார் கூட்டுச் சட்ட அறிமுகம் முதலியன வணிக நம்பிக்கை மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளன. எனினும், இந்த ஒப்பந்தங்கள் எவ்வாறு கட்டமைக்கப்படும் அல்லது எந்தக் குறிப்பிட்ட தொழில்கள் பயனடையும் என்பது பற்றிய தெளிவான வரைபடத்தை ஆளும்தரப்பு முன்வைக்கவில்லை.

மேலும், குறைவான பயன்பாட்டில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுவதானது, பொருண்மிய உற்பத்தியை ஊக்குவிக்கும் என்றாலும், தவறான பயன்பாடு அல்லது ஊழலைத் தவிர்க்கும் செயல்முறை வெளிப்படையானதாக இருக்க வேண்டும்.

புதிய முயற்சியாளரும் சிறிய தொழில்நுட்ப நிறுவனங்களும் தத்தம் செயல்பாடுகளை விரிவாக்க சிறப்பான வரி விலக்கு மற்றும் நிதி ஆதரவு வழங்கப் படவில்லை. பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டுமாயின், எண்ம உட்கட்டமைப்பு, சைபர் பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் புதிய முயற்சிகளுக்குக்கான ஊக்கத்தொகைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரச தெளிவாகக் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

வாகன இறக்குமதி வரிகள் போன்ற தற்காலிக நடவடிக்கைகளுக்கு அப்பால் நீண்ட கால வருவாய் நிலைத்தன்மையை அரசு எவ்வாறு உறுதி செய்யும் என்பதை குறிப்பிடவில்லை. அத்தோடு அரச ஊழியர்களின் ஊதியத்தை மூன்று ஆண்டுகளில் 325 பில்லியன் உயர்த்தும் நடவடிக்கையானது வருவாய் வளர்ச்சியுடன் பொருந்தவில்லை என்றால் அது நிதி அழுத்தத்தை மோசமாக்கும். நிதி நிலையின் உறுதித் தன்மையைப் பேணும் பொருட்டாக,மாற்று வருவாய் வழிமுறைகள் வரி சீர்திருத்தங்கள்,செலவினக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் உள்ளிட்ட விரிவான நிதி உத்திகளை அரசு அறிவிக்க வேண்டும்.

சமூகப்பாதுகாப்புசெலவினங்களை232.5 பில்லியன் ரூபாவாக உயர்த்துவதானது, அரசு ஊழியர்களது ஊதியம் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களது கொடுப்பனவை அதிகரித்தல் முதலிய முன் மொழிவுகள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதாக இருப்பினும் இவ்வூதிய உயர்வுக்கான படிப்படியான அணுகுமுறையானது, அரசின் மீதான அதிருப்திக்கு வழிவகுக்கும், மேலும் ஊதிய உயர்வுகள் உற்பத்தித்திறன் வளர்ச்சியுடன் பொருந்தவில்லை என்றால் பணவீக்க அபாயம் உருவாகும்.

இந்த நலத்திட்டங்களுக்கு நிலையான நிதியை எவ்வாறு வழங்குவது என்பது பற்றிய விரிவான உத்திகளை அரசு வழங்கவில்லை. பொருளாதார உறுதித் தன்மையுடன் சமூக நலனை சமநிலைப்படுத்த வேண்டுமாயின், அரசு உற்பத்தித்திறன்-இணைக்கப்பட்ட ஊதிய முறை, பரந்த ஊதிய உயர்வுகளுக்கு மாற்றாக இலக்குப் பணப் பரிமாற்றம், ஒரு கட்டமாக நிதி ஒழுங்கு செய்தல் முதலிய திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

மேலும் இலங்கை குடித்தொகையில் 52 வீதத்தைக் கொண்ட பெண்கள் மற்றும் சிறார் நலன்களுக்கு பொறுப்பான அமைச்சுக்கு கடந்த நிதியாண்டில் 20 பில்லியன் ஒதுக்கப் பட்டது இந்த நிதியாண்டில் அது 15 பில்லியனாக குறைக்கப் பட்டுள்ளது. இந்த நாட்டில் பெருந்தொகையான பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன.

வடக்கு கிழக்கில் 92,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்களுக்கு நிலையான வருமான வழிமுறைகள் இல்லைஇ இதனால் இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகளது எதிர்காலம்கேள்விக்குறியாகஉள்ளது.எனவே பெண்கள்தலைமைதாங்கும்குடும்பங்களுக்கு வருவாய் பெறக்கூடிய சுய தொழில்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்தின் பங்கு கணிசமாக இருந்தபோதிலும், நீர்ப்பாசன மேம்பாடுகள் மற்றும் எந்திரமயமாக்கல் உத்திகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. தொழிற் சந்தைதேவைகளோடுகல்வியைஇணைக்கத் தெளிவான திட்டம் எதுவும் இல்லை. தொழில் பயிற்சி, ஆராய்ச்சி நிதி மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் (ரீவீசினி) திறன் மேம்பாட்டு திட்டங்களை உள்ளடக்கிய நன்கு வரையறுக்கப்பட்ட உயர்கல்வி சீர்திருத்த உத்தியை அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மோசமான உட்கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வு நிதியினால் பாதிக்கப்பட்டுள்ளன அறிவு சார்ந்த பொருளாதாரமாக இலங்கை மாறுவதை நோக்கமாகக் கொண்டால், இந்தப் பல்கலைக்கழகங்கள், நவீன வசதிகள், ஆராய்ச்சி நிதி மற்றும் வினைத்திறனான ஆசிரியர்குழுவை கொண்டதாக இருக்க வேண்டும்.

உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டாக உட்கட்டமைப்பு மேம்பாடு ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அரசு, பல இலட்சியச் சீர்திருத்தங்களை அறிவித்தாலும், இந்த முயற்சிகள் எவ்வாறு செயல்படுத்தப்படும்? யார்பொறுப்பேற்பார்கள்? அல்லது வெற்றியை அளவிட எவ்வாறான அளவீடுகள் பயன்படுத்தப்படும்? என்பன பற்றிய போதுமான தகவல்களை அரசு வழங்கவில்லை. இந்தத்தெளிவின்மையானது, குழப்பத்திற்கும், செயல்படுத்துவதில் தாமதத்திற்கு கொள்கைசெயற்பாட்டில்திறமை இன்மைக்கும் வழிவகுக்கும் என்றார்



## அடக்குமுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை தற்போது குறிப்பிடப்போவதில்லை. ஏனெனில் அவற்றை ஆளும் தரப்பின் 158 உறுப்பினர்கள் குறிப்பிடுவார்கள். குறைகளை சுட்டிக்காட்டுகிறேன்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆளும்தரப்பு 69 இலட்ச மக்களாணையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் பொது ஜன பெரமுன பற்றி பேசப்படவில்லை. ஆனால் தற்போது அதிகளவில் பேசப்படுகிறது எதிர்வரும் காலங்களில் எமது பலத்தை அதிகரிப்போம்.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கங்களுக்கும், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் உள்ளடக்கத்துக்கும் இடையில் பாரிய பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரி இல்லாத வரவு செலவுத் திட்டம் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட ஆளும் தரப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் பல்வேறு வழிமுறைகளில் 24 சதவீதமளவில் வரி அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் 4600 கோடி ரூபாய் வரி வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 04 மாதங்களில் பல வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மீதான வெற் வரியை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார மேடைகளிலும், கொள்கைத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டன.

தமது ஆளும்தரப்பின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் இவற்றை செயற்படுத்துவதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார். ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் வெற் வரி குறைப்பு பற்றி ஏதும் பேசப்படவில்லை

ஆளும்தரப்பு எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்களை தற்போது தீவிரப்படுத்தியுள்ளது. ஆளும்தரப்பின் பிரதி அமைச்சர் ஒருவர் பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சகிராமத்துக்குச்சென்றால்புதைகுழிக்கு செல்லநேரிடும் என்று குறிப்பிடுகிறார். பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன. இந்த பழியையும் அரசாங்கம் கடந்த ஆளும்தரப்புக்கள மீது சுமத்துகிறது.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் குறிப்பாக ராஜபக்சக்கள் மீது சுமத்தப்படுகிறது. நாமல் ராஜபக்ச ஊருக்குச் சென்றால் புதைகுழிக்கு செல்ல நேரிடும் என்று பிரதி அமைச்சர் அச்சுறுத்துகிறார். இது மிகவும் பாரதூரமானது.

இது பத்தரமுல்லை அலுவலகத்தின் திட்டமா, மக்கள் விடுதலை முன்னணியின் உண்மையானமுகம்தற்போதுவெளிவருகிறது. தமது இயலாமையை மறைத்துக் கொள்ள எதிர்க்கட்சிகளைஆளும்தரப்புஅச்சுறுத்துகிறது. பிரதி அமைச்சரின் கருத்தை வன்மையாக கண்டிக்கிறோம். இதுவா ஆளும்தரப்பின் எதிர்காலதிட்டம்என்பதைக்குறிப்பிடவேண்டும் என்று கேள்வியெழுப்பினார்.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டினார்.

இந்தியபிரதிஉயர்ஆணையர்சத்தியஞ்சல் பாண்டே, கொழும்பு, மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்கு நேற்று வருகை தந்திருந்தார். இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், கலாசார மற்றும் பொருளாதாரஉறவுகள்பற்றிப்பேசப்பட்டாலும் மீனவர் பிரச்சினை குறித்த விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இந்திய மீனவர்களின் இழுவைப் படகு உட்பட சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையால் வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இலங்கையின் கடல்வளத்துக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி அமைச்சர் எடுத்துரைத்தார்.

இலங்கைக்கடற்பரப்புக்குள்அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது. மீனவர் பிரச்சினையை மனிதாபிமான ரீதியிலேயே அணுகவேண்டும் என இந்திய பிரதி உயர்ஆணையர் கூறும்போது,

ஆம், மனிதாபிமான முறையிலேயே அணுகுகின்றோம், சம்பவதினத்தன்று இந்திய மீனவர்கள் கடற்படையினரை அச்சுறுத்தும் விதத்தில் நடந்துகொண்டதாலேயே அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது என சுட்டிக்காட்டினார்.

அதேபோல பெரும்பாலான மீனவர்கள் கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தால் திரும்பி செல்கின்றனர் எனவும், ஒரு சிலரே அத்துமீறுகின்றனர் எனவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

தமிழகத்திலுள்ள பணபலம் படைத்த முதலாளிமார், அரசியல்வாதிகள் மீனவர்களைப் பகடைக்காயாகப்பயன்படுத்தமுற்படுகின்றனர் எனவும், தமது வாழ்வாதாரம் பற்றி மட்டுமே அவர்கள் சிந்திக்கின்றனர் எனவும், வடக்கு மீனவர்களின் நிலை பற்றி சிந்திப்பதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அதேவேளை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை வடக்கு மீனவர்களுக்கு தேசியமக்கள்சக்திவழங்கியது. அதற்குமக்கள் ஆணைவழங்கியுள்ளனர். அந்தஆணையை மதித்து, நிறைவேற்றுவதற்குரியபொறுப்புதமது தரப்புக்கு உள்ள விடயத்தையும் அமைச்சர் மேற்படி சந்திப்பின்போது எடுத்துரைத்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக அபிவிருத்திக்காக இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், அவை தொடர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

## பாலியாற்றுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக அறிந்திருக்கிறீர்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

கடந்த ஏழு தசாப்தங்களாக யாழ்ப்பாண மாநகர பிரதேச, தீவக மற்றும் தென்மராட்சி மக்கள் குறிப்பாக நியாயமான சுகாதாரமான நீர் விநியோகத்திற்கு ஏங்கியிருக்கிறார்கள்.

வட மாகாணசபை, யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கானநீர்விநியோகத்துக்கெனவருடம் முழுவதும் கடலைச் சென்றடையும் நீரை திசைதிருப்பும் திட்டமாக பாலியாறு நீர்விநியோகத் திட்டத்தை முன்மொழிந்திருந்தது.

அந்தத் திட்டத்தை செலவுச் சிக்கனமான, சாத்தியமான அவசரமான ஒன்றாக பரிசீலித்து ஏற்றுக்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு சிபாரிசு செய்தது.

2024 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் பாலியாறு நீர்வழங்கல் திட்டத்திற்கென ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டு, திட்டப்பணிமனையும் உத்தியோக பூர்வமாக வெள்ளாங்குளத்தில் 2024 மே மாதம் பதினைந்தாம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர்நிறைவேற்றலுக்கானநிதிஒதுக்கீடுஎதுவும்2025ஆம்ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப் படாமையை ஈட்டு மிகவும் கவலையும் ஏமாற்றமும் அடைகிறோம். இந்தத் திட்டம் கைவிடப்பட்ட மாதிரியான தோற்றப்பாடு காணப்படுகின்றது.

எனவே இந்தத் திட்டத்தின் நிறைவேற்றலுக்கான போதிய நிதியை தற்போது பரிசீலிக்கப்படும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்து அதன் துரித நிறைவேற்றத் திற்கானபணிப்புரையைவழங்கவேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் காங்கிரஸின் காரியாலயம் திறந்து வைப்பு

(ஹாரீஸ்)

ஐக்கிய மக்கள் காங்கிரஸின் உத்தியோகபூர்வ காரியாலயம் அதன் செயலாளர் ஏ.சி.யஹியாக்கான் தலைமையில் ஞாயிற்றுப்பிழமை சாய்ந்தமருதில்திறந்துவைக்கப்பட்டது.

இதன் போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் கடந்த 15 வருடங்களாக இணைந்து பயணித்து வருகிறேன். மறைந்தமாபெரும்தலைவர்மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்தகட்சியை எமது சமூகத்தின் இருப்புக்காகவும், பிரதேச அபிவிருத்திக்காகவும் உருவாக்கினார். ஆனால் இப்போதுள்ளவர்கள் தமது கஜானாக்களை நிரப்புவதற்காக இதனை பாவித்து வருகின்றனர். நான் இக்கட்சியினால் பல்வேறு வெட்டுத் குத்துக்களையும், ஏமாற்றங்களையும் நேரடியாக சந்தித்தவனாக காணப்படுகின்றேன். முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வித பயனும் தராத, காணிகளை மீட்க திராணியற்ற, கல்முனை நகர அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை உணர்ந்து சிந்தித்து அங்கிருந்து வெளியேறினேன்.

எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த எண்ணமும் இவர்களுக்கில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்று அரசியலை செய்து வருகின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் அமைச்சராக இருந்தும் கல்முனைக்கு எவ்வித அபிவிருத்திகளும் நடக்கவில்லை. கல்முனையை அபிவிருத்தி செய்ய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் எடுத்தஎத்தனங்களை அவர்களே தடுத்தார்கள். இக் கட்சியில் வாய்மூடி மெளனியாக இருந்து சொல்வதற்கெல்லாம் ஆம் என தலையசைத்தாள் மாத்திரமே கட்சியில் உறுப்பினராக இருக்க முடியும். அதை மீறி செயற்பட்டால் கட்சி உறுப்புரிமை இழக்கப்படும் என ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஏ.சி.யஹ்யாகான் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் திருகோணமலை உட்பட இன்னும் சில மாவட்டங்களிலும் நாங்கள் களமிறங்க தயாராகி வருகிறோம். - என்றார்.

இதன் போது பல்வேறு ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வறுமையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

தற்போது இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 6 பேரில் ஒருவர் பல்பரிமாண வறுமைக்குட்பட்டு இருப்பதுடன், குறித்த சனத்தொகையில் 95.3 சதவீதமானவர்கள் கிராமிய மற்றும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். இலங்கையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்களின் இறுதிப் பெறுபேறுகள் பற்றி எந்தவொரு தரப்பினரும் திருப்தியடையவில்லைஎன்பதைக்கருத்துக்கள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக வறுமை ஒழிப்பு நலனோம்புகை வேலைத்திட்டங்கள் மூலம் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கையும், அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதியும் படிப்படியாக அதிகரித்துள்ளது. 2000ஆம் ஆண்டில் 1.10 மில்லியன் பயனாளிகளும், 2010 ஆம் ஆண்டில் 1.57 மில்லியன் பயனாளிகளாக அதிகரித்துள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டில் 1.79 மில்லியன் பயனாளிகள் வரை அதிகரித்துள்ளது.

இந்நிலைமையை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது நாட்டின் பொருளாதாரம் மற்றும் உற்பத்திச் செயன்முறைக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். அதனால், இடர்களுக்கு உள்ளாகக்கூடிய குழுவினரை மாத்திரம் முறைசார்ந்த சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்கும், ஏனையவர்களை பொருளாதாரச் செயன்முறையில் முனைப்பானபங்காளர்களாகமாற்றுவதற்கும் படிப்படியாக முறையாகத் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கிணங்க, புதிய அரசின் கொள்கைக் கமைய 'வளமான நாடு - செழிப்பான வாழ்க்கை' எனும் தொலைநோக்கை வெற்றியடையச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் பல்வித அணுகுமறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தலில் போட்டி குறித்து இதுவரையில் முடிவு எதுவும் இல்லை

## இதுவரையில் முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை என்கிறார் பொ. ஐங்கரநேசன்

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அமைத்துள்ள ஒன்பது கட்சிகளின் அணியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் ஒன்றாக இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்துடன் தமிழரசியல் கட்சிகள் சிலவும், தமிழரசியல் கட்சிகள் சிலவற்றுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் பேசிவருகின்றது. எனினும், இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இதுவரையில் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி அமைத்துள்ள அணியில் பசுமை இயக்கமும் இடம்பெற்றுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ள நிலையில் அதுபற்றி பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இவ்வெற்றியைத் தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு பின்னடைவாகவும், உள்ளூராட்சித் தேர்தலிலும் ஜே.வி.பி வெற்றி பெற்றால் அது தமிழ்த்தேசிய அரசியலுக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஜே.வி.பி. எப்பாடுபட்டேனும் தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றிவிட வேண்டும் என்று தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட பாதீட்டு அறிக்கை இதனைத் தெளிவுபடுத்துகிறது. இவற்றைக் கருத்திற்கொண்டு தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகள் சில கூட்டணி அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அக்கறை காட்டி வருகின்றன.



நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கட்சிகள் பெற்ற பின்னடைவு கட்சிகளின் பிளவால் மாத்திரம் ஏற்பட்ட ஒன்று அல்ல. யுத்தத்துக்குப் பின்னரான இளைய தலைமுறையிடம் தமிழ்த்தேசிய அரசியலின் இருப்புக் குறித்துக் கட்சிகள் எடுத்தியம்பாததே பிரதான காரணமாகும்.

தமிழ்த்தேசியக் கட்சிகளின் வேட்பாளர்கள் சிலர் தாங்கள் அமைத்துள்ள கூட்டணிக்கும் மக்களுக்கும் விசுவாசம் இல்லாது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவகம் செய்யும் நோக்கில் அந்நிறுவனங்களிடம் இருந்து பலகோடி ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு தேர்தலில் இறங்கியமையும், அரசிடம் இலஞ்சமாக மதுபான அனுமதிப் பத்திரங்ளைப் பெற்று விற்றுச் சம்பாதித்தமையும் தமிழ்த்தேசியக் கட்சிகளின்மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கட்சிகளின் ஒற்றுமை முயற்சிக்கு ஒருபோதும் எதிரானது அல்ல. எனினும், கூட்டு என்பது தேர்தலில் ஆசனங்களை மாத்திரம் குறியாகக் கொண்டிராது கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

ஜே.வி.பி வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக அரசியல் தரகர்களையும், தமிழ்த்தேசிய எதிராளிகளையும் ஆதரிப்பது தமிழ்த்தேசியத்தை மேலும் பலவீனமடையச் செய்யும்.

இது உண்மையான தமிழ்த் தேசியவாதிகளின் வெற்றி வாய்ப்பையும் பறித்துவிடும். இவற்றைக் கருத்திற்கொண்டே பசுமை இயக்கம் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான உபாயங்களை வகுக்கும். இதுபற்றிய முடிவுகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மக்களுக்குத் தானே அறியத்தரும் என்றும் தெரிவித்துள்ளார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் விரைவில்

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



● CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
● NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
● வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
● ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
● GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# மகத்துவம் மிக்கது மகாசிவராத்திரி !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்று நம்பிக்கை ஊட்டினார் ஞானசம்பந்தப் பெருமான்.அவரால் அப்பரே என்று அழைக்கப்பட்டவர், 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா ' என்று அழைத்து ' கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் – நற்றுணையாவது நமச் சிவாயவே ' என்று உபதேசம் செய்தார்.அவர்களின் பின்னர் வந்தவர் ' மீளா அடிமை உமக்கே ஆளாய் ' என்று இறைவனிடம் இயம்பி நிற்கின்றார். ' ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி – உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் செல்வமாகிய சிவனை ', ' நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க , இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க ' என்று பணிந்து நின்று அதன் வழியில் எம்மையும் ஆற்றுப்படுத்துவராக மணி வாசகப் பெருமான் வந்து நிற்கிறார். இவர்கள் யாவருமே இறை நினைப்பினை மனமிருத்தி வாழ்நாளெல் லாம் வாழ்ந்தவர்கள். இவர்கள் சமயநெறியின் வழியில் கால்பதித்து நின்றவர்கள் எனலாம். இவர்களை முன்னிறுத்தியே ' நால்வர் வழியில் நடப்பது நன்று ' என்றும் , ' நாலு பேர் சொல்லுவதைக் கேள் ' என்றும் மரபாக வந்திருக்குமோ என்பதும் கருத்திருத்த வேண்டியதே.இவர்களின் சிந்தனை, செயற்பாடு , வாழ்

வியல் முறைகள் அத்தனையுமே கோவிலாகவே இருந்திருக்கிறது என்பதுதான் முக்கியமா கும். கோவிலை மையமாகக் கொண்ட இவர்களின் செயற்பாடுகளிற் கிடைத்த அனுபவங்கள் எங்கள் சமயநெறியில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. முழுமுதற் கடவுளாய் எம்பிரான் சிவனையே இவர்கள் யாவரும் பணிந்து போற்றி , தங்களின் மனத்தைப் பக்தியால்பிணைத்து,உருக்கமாய்பலதெய்வத்திருமுறைகளாக ஆக்கி எமக்கெல்லாம் அளித்திருக்கிறார்கள். அவர்களின் அகத்தில் அமர்ந்திட்ட அந்த ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியான சிவனைக் குறித்து பல விரதங்கள் அனுடிக்கப்பட்டு வருவதை யாவரும் அறி வோம்.அப்படி அமையும் அந்த அருட் சோதியான சிவனின் விரதங்களுள் மிகவும் போற்றுதலுக்கு உரியதா கவும், ஆன்மீக. அறிவியல் கருத்துகள் நிறைந்ததாகவும் அமைகின்ற விரதந்தான் வருடந் தோறும் வருகி ன்ற ' மகா சிவராத்திரி ' விரதமாகும்.

மகிமை வாய்ந்த சிவராத்திரி என்பது ஐந்துவகையினதாக இருக்கிறது என்பது நோக்கத்தக்கத்தாகும். திங்கட்கிழமையோடு இணைந்து வருவது ' யோக சிவராத்திரி. வருடத்தின் பனிரெண்டு மாதங்களில் வரு கின்ற தேய்பிறை, வளர் பிறைகளில் வரும் சதிர்த்தசி திதியில் வருகின்ற இருபத்து நான்கு நாட்களை யும் ' யோக சிவராத்திரி ' என்னும் பெயரினால் அழைக்கின்றனர் . தை மாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி பதிமூன்று நாட்கள் தினமும் ஒரு வேளை மட்டும் உணவு உண்டு , பதினான்காம் நாள் வரு கின்ற சதிர்த்தசி திதியன்று முறையாக விரதம் இருப்பதுதான் ' பட்ச சிவராத்திரி ' என்று அழைக்கப்படு கிறது,சிவராத்திரி என்பது பெரும்பாலும் அமாவாசை அல்லது சதிர்த்தசி திதியை அண்டியே வரும். ஆனால் ' மாத சிவராத் திரி ' மாதத்தின் மற்றைய திதிகளிலும் வருகிறது என்பது நோக்க த்தக்கதாகும். இப்படிச் சிவராத்திரிகள் இடம் பெற்றாலும் மாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் வருகின்ற சிவராத்திரியே ' மகா சிவரா த்திரி ' என்று ஏற்றிப் போற்றி அனுட்டிக்கப்படுகிறது. ஐந்து சிவராத்திரிகள் என்னும் நிலையில் அவற்றுள் ஒன்றான சிவராத்திரிக்கு மட்டும் ' மகா ' என்று அடைமொழி கொடுத்து அதனை உயர்வாக எண்ணுவது ஏன் என் னும் எண்ணம் எம்முள் எழுகிறதல்லவா ? அப்படி அந்த நாளில் சிவராத் திரி அமைவதற்கு ஆன் மீகம் முக்கியமா அல்லது அதனுடன் அறிவியல் முக்கியத்துவப்படுத்த ப்படுகிறதா என்ன்னும் சிந்தனைகள் எழுகின்றன அல்லவா !

எங்களின் சமயம் வாழ்வியல் நெறிகளை முழுவதுமாய் உள்ளடக்கிய சமயமாகும். உணவு சம்பத்தப்படுகி றது. உடை சம்பத்தப்படுகிறது.உடற் சுத்தம் சம்பத்தப்படுகிறது. பரம்பொருளைப் பாடிப்பரவுதற்கு நல்லுட லும், நல்லாரோக்கியமும் அடிப்படையாகும். உடலின் ஆரோக்கியத்துக்கு உணவு என்றுமே இன்றியமை யாததாகும். இவை அனைத்தையும் தாங்கி நிற்பதா கவே எங்கள் சமயம் ' விரதம் ' என்னும் நிலையினை ஏற்படுத்தி இருக் கிறது எனலாம். அது கூடத் திட்டமிடப்பட்டே இருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். விரதம் என்று சொல்லும் வேளை அங்கே கோள்கள் சம்பந்த ப்படுகின்றன. திதிகள் சம்பந்தப்படுகின்றன. கோள்களினால் நாள்கள் அமை கின்றன. நாட்களும், திதிகளும் ஆன்மீக மார்க்கத்தில் தத்துவத்தை , அறி வியலைக் குறித்திடும் நுட்பமான சொற்கள் என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமேயாகும். இதன் அடிப்படையில்த்தான் நாம் ' மகா சிவராத்திரியை ' பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சமயத்தின் நுட்பமான கருத்துக்களை யாவரும் விளங்க வேண்டும் என்ப தற்காகவேதான் கதைகள் வந் தன. கதைகளின் இன்னுமொரு நிலைதான் புராணங்கள் என்றுகூட எடுத்துக்கொள்ள்ளலாம். அந்த வகை யில் சிவராத்திரி எப்படி ஏற்பட்டது என்பதற்கு பல கதைகள் வழக்கில் வழங்கி வருவது அனைவரும் அறிந் ததேயாகும். கதைகளை வைத்துக் கொண்டு சமயத்தையோ அல்லது அதன் தத்துவத்தையோ விமர்சிப் பதோ அல்லது கேலியாகப் பேசுவதோ ஏற்புடையதல்ல. இனிப்புத் தடவி அதனுள் மருந்தினை வைத்துக் கொடுப்பது போலத்தான் , புராணக் கதைகள் சமய உண்மைகளை எடுத்து உரைக்கி ன்றன என்பதுதான் உண்மை நிலையாகும்.

திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால விஷத்தை எம்பெருமான் ஏற்று –தானே உண்டாரெ ன்பதும், பிரம்மாவும் , விஷ்ணுவும் ஆணவத்தால் முரண்பட்டு யார் பெரியவர் என்று நின்ற நிலை யில் எம் பெருமான் ஜோதிப் பிளம்பாகத் தோன்றினார் என்றும் ஆவர்கள் அந்த ஜோதியின் அடியையும் முடியையும் தேடியும் காணொணா நிலையில் எம் பெருமான் அவர்களுக்கு உண்மையினை உணர்த்தினார் என்பதும்,

கண்ணப்பருக்கு எம்பெருமான் காட்சி கொடுத்தரென்றும், பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனு க்கு பாசுபாஸ்திரம் கிடைக்கச் செய்தாரென்றும், யமனிடமிருந்து மார்க்கண்டேயரை எம்பெருமான் காத்த தினமென்றும் , பல கதைகள் வழக்கில் இருந்து வருகின்றன என்பது நோக்கத்த த்தக்கது. இவைதான் சிவ ராத்திரி என்றால் இதற்கு அப்பாலும் சிவராத்திரியின் சிறப்பு இருக்கிறது என்பதுதான் மிகவும் முக்கிய மாகும். அதுதான் – மகாசிவராத்திரி என்று மாசியில் ஏன் சிறப்பாக்கினார்கள் எங்கள் முன்னோர்கள் என் னும் அறிவியல் அணுகு முறையாகும்.


நாங்கள் அனைவருமே பூமியிலேயே இருக்கிறோம். பிறப்பும் ,இறப்பும் யாவருக்கும் இந்தப் புவியிலே தான்.உலகம் என்பதுநாம்வாழுகின்றஇடம்.இந்தஉலகம்இயங்குவதற்குஒரு சக்தி கட்டாயம் தேவையா னதுதானே. அந்தச் சக்தியைத்தான் ' ஈத்தர் ' என்று அறிவியல் சொல்லுகிறது.ஈத்தர் என்னும் சக்தியானது அண்டம் முழுவதுமே நிறைந்தே இருக்கிறது என்று அறிவியல் பகர்கிறது,

பூமியானது சூரியனை சிறிய நீள்வட்டப் பாதையிலும் பெரிய நீள்வட்டப் பதையிலுமாக இரண்டு பாதை யில் சுற்றி வருகிறது என்பது வானியல் அறிவாகும். இவ்வாறு பூமி சுற்றி வரும்பொழுது பெரிய நீள்வட்டப் பாதையில் இருந்து சிறிய நீள்வட்டப் பாதைக் கு மாறுகின்ற நேரமாகத்தான் எங்களின் ' மகாசிவராத்திரி ' வரும் நேரம் அமைகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். ஈத்தர் சக்தியானது எப்பொ முதுமே பூமியை நோக்கி வந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். ஆனால் வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரியில் மட்டு மே ஈத்தர் சக்தியின் அளவு அபரிதமாக இருக்கும். இப்படி அபரிதமாக இம்மாதத்தில் வருடத்துக்கு ஒரு முறை அமைவதால் இக்காலத்து வருகின்ற சிவராத்திரியை ' மகாசிவராத்திரி ' என்று உயர்வுடன் போற் றும் நிலை ஏற்பட்டது என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமானதாகும் .

மாசிமாதத்தில் வருகின்ற ஈத்தருக்கு அதிக சக்தி காணப்படுகிறது. ஈத்தர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நகரும். பூமியானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சுற்றிக் கொண்டிருக்கும். எனவே நேரடியாக முழுச்சக்தியும் கிடைக்கும் நிலை இந்த மகா சிவராத்திரிக்கே வாய்க்கிறது.

மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து கண்விழித்து முதுகை நேராக வைத்து தியானம் செய்யும் பொழுது ஈத்தர் உச்சந்தலையில் உள்ள சகஸ்ரார சக்கரத்தின் வழியாக பீனியல் கிளாண்ட் என்ற ஆனந்த சுரப்பி மூளையை அடைந்து பல வித நல்ல ஹார்மோன்களைச் சுரக்கச் செய்கிறது. இந்த நேரத்தில் நமக்கு நாமே ஆசீர்வாதம் ( றீளயிக்ஷ் யயிளவிவிஷ்ஐஆ) செய்து கொள்ளும் பொழுது இது நமது டி என் ஏ (ம்ஹிபு) ல் கெட்ட பதிவு களை (கர்மா ) அழிக்கும் வல்லமையை உருவாக்குகிறது.

ஈத்தர் சக்தி என்பது பகலிலும் உண்டு. இரவிலும் உண்டு. பகலில் சூரிய வெளிச்சம் காரணமாக சற்று க்குறைவாகவே காணப்படும். ஆனால் இரவில் சூரிய



வெளிச்சம் காணப்படாமையினால் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். இரவு ஒன்பது மணி தொடக்கம் அதிகாலை இரண்டு மணிவரை உடலின் இயக்கமும் வித்தியாசமாய் இருக்கும். இவ்வேளை ஈத்தர் சக்தியின் அளவும் கூடதலாகவே அமையும் நிலை காணப்படுவதால் இவ்வேளையிலே கட்டாயம் விழித்திருப்பது அவசியமாகிறது. எனவேதான் மகாசிவ ராத்திரியின் முக்கிய சாமமாக இந்த நேரம் எமது சமயரதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

ஆன்மீகத்துடன் அறிவியலைச் சித்தர்கள் இணைத்தே விட்டார்கள். சித்தர்களின் நோக்கில் சிவராத்திரி என்பது மிகவும் முக்கிய தினமேயாகும். அதுவும் மகாசிவராத்திரி உடலையும், உள்ளத்தையும், நல்ல நிலை யில் வைப்பதற்கு மிகவும் உகந்த தினம் என்பதே அவர்களின் தீர்க்கமான முடிவாகும். சித்தர்களின் சிந்தனை பலருக்கும் விளங்க மாட்டாது. ஆனால் அவர்கள் உண்மைநிலையினையே உரைத்து நிற்பார்கள்.

பசித்திருத்தல் என்பதும் தத்துவார்த்தமானது. அதாவது இறையுணர்வினைப் பெறுவதற்கு பசித்திருக்க வேண்டும். தனித்திருத்தல்என்பதுதனிமையாகஇருப்பதன்று.மனத்தினை அலையவிடாமல்ஒரு நிலை யில் வைத்திருப்பதாகும். விழித்திருத்தல் என்றால் நித்திரை செய்யாது இருப்பதல்ல. மனத்தை எங்குமே செல்ல விடாது இறை நினைப்பை நாடி விழித்திருக்கும்நிலையினையேகுறிப்பதாகும்.இம்மூன்றையும் மகாசிவராத்திரின் முக்கிய நிலையாக நாம் அனைவரும் கொள்ளுதல் வேண்டும்.

விரதம் என்றாலே கட்டுப்பாடு என்றுதானே அர்த்தப்படும். கட்டுப்பாடு என்பது உடலுக்கு மட்டுமல்ல. உள்ள த்துக்குந்தான் என்பதை உணர்த்துவதே விரதத்தின் உயர் நிலையாகும்.மகாசிவராத்திரியில் உடல் கட்டுப் படுகிறது.உள்ளமும் கட்டுப்படுகிறது. எம்முள்ளே அபரிதமான ஒருசக்தியும்உள்நுழைகிறது.அந்தச்சக்தியினைஉள்வாங்கும் பக்குவத்தை நாம்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

' தேடிக் கண்டு கொண்டேன் – திரு மாலொடு நான் முகனும்
தேடிக் தேடொணத் தேவனை யென்னுளே தேடிக்
கண்டு கொண்டேன் '

இதுதான் உண்மையான நிலையாகும். அந்தத் தேவனை நாங்கள் அனைவருமே காணலாம். அதற்காக த்தான் யாவரும் – பசித்து, தனித்து , விழித்து , இருத்தல் அவசியமாகிறது.

சிவனே முழுமுதற் கடவுள். சிவனே அனைத்துக்கும் காரணமாய் இருக்கிறார். அவரின்றி ஓர் அணுவுமே அசையாது.ஆதியும் அவரே. அந்தமும் அவரே. இருளும் அவரே. அதையகற்றும் பேரொளியும் அவரே. அவரை முன்னிலைப்படுத்தும் பெருவிரதமாக எங்கள் சமய நெறி கைகாட்டி நிற்பதுதான் ' மகாசிவரா த்திரி ' ஆகும்.அந்தப் புனிதமான தினத்திலே ' தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி – அல்லல் அறுத்து ஆனந்தம் ' தரும் வண்ணம் , எல்லையில்லாஅன்புடன்யாவரும்அந்தச்சிவப்பரம்பொருளை இறைஞ்சி நிற்போம்.

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

# பருத்தித்துறை கடற்கரையில் தூய்மையாக்கல் திட்டம்

(சுபேசன்)

ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 'சுத்தமான இலங்கை திட்டத்தின்' ஒரு பகுதியாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் எம்.பிரதீபன் மற்றும் பாதுகாப்புப் படைத் தளபதி (யாழ்ப்பாணம்) மேஜர் ஜெனரல் மணத யஹம்பத் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, 52 காலாட்படை பிரிவின் தளபதி பிரிகேடியர் பி.எஸ்.கே. ரனதுங்கமகே மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோரின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கடற்கரைச் சூழல் துப்புரவு செய்யப்பட்டது.

இதன்போது 52 ஆவது காலாட்படை படையணியின் துருப்புக்கள், பருத்தித்துறை பிரதேச செயலகம் ,பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை - மந்திகை, பருத்தித்துறை பொது சுகாதார அதிகாரி அலுவலகம் ,இலங்கை கடற்படை, இலங்கை காவல்துறை மற்றும் உள்ளூர் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

பருத்தித்துறை கடற்கரையின் இயற்கை அழகை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவித்தல்.



'ஓர் அழகான கடற்கரை, ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளம்' என்ற கருப்பொருளின் கீழ் மேற்படி செயற்திட்டம் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 17 அதிகாரிகள், 250 இராணுவ வீரர்கள், இலங்கை கடற்படையைச் சேர்ந்த 10 மாலுமிகள், இலங்கை காவல்துறையைச் சேர்ந்த 40 காவல்துறை அதிகாரிகள், அரச மற்று அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த 222 அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பருத்தித்துறை கடற்கரை மற்றும் அதைச் சுற்றியுள்ள சாலையோரத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் இந்து மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்களுடன்- பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கே. இளங்குமரனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கச்சாய் மகா வித்தியாலய இல்லமெய்வல்லுநர் நிகழ்வு

(சுபேசன்)

யாழ். கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர்நிகழ்வு வெள்ளிக்கிழமை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

பாடசாலை முதல்வர் ஐ.தேவராஜன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசனும்,

சிறப்புவிருந்தினராக ஐக்கிய இராச்சிய வைத்தியர் வே.பரமநாதனும், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவனும்-சிரேஷ்ட விருவுரையாளருமான பொறியியலாளர் அகுணறாஜ், மற்றும் பழைய மாணவியும்-ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி சு.ஜெகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது ஒலிம்பிக் தீபமேற்றல், அணிநடை, ஓட்டப் போட்டி நிகழ்வுகள், அஞ்சல் ஓட்டம், கலப்பு அஞ்சல், இடைவேளை நிகழ்வு, கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.



# மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர்காத்தல் தொடர்பான அடிப்படை கற்கைநெறி பயிற்சிகள் அம்பாறையில்

(தில்சாத் பர்வீஸ்)

அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவியின் தலைமையில் அம்பாறைகுளத்தில்ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றது.

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் தொடர்பான பயிற்சி நெறியை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எம். நஸீர் ஆரம்பித்து வைத்தார். அத்துடன், அம்பாறை பொலிஸ் நிலைய மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் அதிகாரிகளான ஏ.டி. அசங்க, ஆர்.ஏ.எஸ்.என். குமார, எம்.ஆர்.சி.எஸ். பண்டார, கே.ஜி.எஸ். சரந்தினன், டபிள்யூ.டி.எஸ். வசந்த, உள்ளிட்ட குழுவினினால் சுமார் 30 தொடக்கம் 40 வரையான தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நான்காம் நாள் பயிற்சியில், படகு ஓட்டுதல், தாழ்வான இடத்தில் தாழ்ந்தவரை எப்படி மீட்பது, படகை நிறுத்துவதற்கு நங்குரத்தை எப்படி பயன்படுத்துவது மற்றும் பழுதடைந்த படகை திருத்துதல் தொடர்பான பயிற்சி அம்பாறை குளத்தில் வழங்கப்பட்டது.






இதன் போது, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக்கல்லூரியின் செயலாளர் ஐ.எல்.எம். முஸ்தபா மௌலவி அவர்களால் தொடர்ச்சியாக நான்காவது நாளாக காலை, மாலை சிற்றுண்டி மற்றும் பகல் உணவு போன்றவை வந்தவர்களுக்கு இப்பயிற்சியில் ஈடுபடும் அனைவரும் தமது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2025இல் வெளியிடப்பெற்றது